O.S. 227/2022 நாள்: 04.02.2025

PW 1 பஞ்சநாதன் த/பெ. சந்தானகோபாலன்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1. தாவா சொத்தின் புல எண் என்னவென்று தெரியுமா என்று கேட்டால் 136/9 ஆகும். ( சாட்சி மீண்டும் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை என்று கூறினார்) தாவா சொத்து நத்தம் வரைபாடு என்றும் அதன் விஸ்தீர்ணம் 50 சென்ட் என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேனா என்று கேட்டால் பராமரித்து வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்களை நான் கூறிதான் என் வழக்கறிஞர் தயார் செய்தார் என்று சொன்னால் சரிதான். வழக்குரையில் குறிப்பிட்டுள்ள தாவா சொத்தின் நான்கெல்லைகள் சரிதானா என்றால் சரிதான். வழக்குரையில் கூறியது போல தாவா சொத்தை யார் அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு எழுதி வைத்தார்கள் என்று கேட்டால் என் தாத்தா 1901ம் ஆண்டு எழுதி வைத்தார். அப்படி எழுதி வைத்ததற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. தாவா சொத்தை அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு எழுதி வைத்த பின்பு எத்தனை ஆண்டுகளாக எங்கள் வசத்தில் உள்ளது என்று கேட்டால் சுமார் 150 ஆண்டுகளாக எங்கள் வசம் உள்ளது. என் தாத்தாவுக்கு ஆண் வாரிசுகள் இரண்டு பேரும், பெண் வாரிசுகள் இரண்டு பேரும் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து என் தாத்தா இறந்தபிறகு இரண்டு ஆண் வாரிசுகள் இருக்கும் நிலைமையில் எதனடிப்படையில் என் வசம் வந்தது என்று கேட்டால் எங்கள் குடும்பம் கட்டளை உபயதாரர் என்றும், அதனடிப்படையில் என் தாத்தா இறந்ததற்கு பிறகு என் தந்தையாருக்கு வந்தது, அவருக்கு பிறகு தாவா சொத்து என் வசம் வந்தது. தாவா சொத்து என் தந்தையார் வசம் வந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என் தகப்பனாருக்கு 4 ஆண் வாரிசுகள் என்றும் 2 பெண் வாரிசுகள்.

3. தாவா சொத்து என் தகப்பனாரிடமிருந்து 6 வாரிசுகள் இருக்கும் நிலைமையில என் வசம் எவ்வாறு வந்தது என்று கேட்டால் நான் மூத்தப்பிள்ளை

என்றும், என் தகப்பனார் மறைவுக்கு பின் நான் தான் கட்டளை உபயதாரர் அடிப்படையில் என் வசம் வந்தது. மற்ற வாரிசுகளை நான் தான் பார்த்து வருகிறேன். என் சகோதரர்களுக்கு இடையே நான் தான் கட்டளை உபயதாரராக இருக்க வேண்டும் என்று என் தகப்பனார் ஆவணம் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தில் 18 தென்னை மரங்களும், கருவ மரங்களும் உள்ளது என்று சொன்னால் சரிதான். தென்னை மரங்களை என் தாத்தா நட்டு வைத்தார். தாவா சொத்தை பாகமாக பிரிக்கும் வகையில் வேலி ஏதேனும் அமைந்துள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை சுற்றி வேலி உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் பாகமாக பிரிக்கும் வகையில் வேலி உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4. வருடத்திற்கு ஒரு முறை தென்னை மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய தேங்காயை விற்று ஒரு பசலிக்கு ரூ.600/-பணத்தை கோவிலுக்கு அனுப்பி வைப்பேன். தாவா சொத்தில் தென்னை மரங்கள் கிடையாது என்றும் வழக்கிற்காக அவ்வாறு மரங்கள் உள்ளது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கோவிலுக்கு தானமாக கொடுத்த சொத்தை யாரும் தானே அனுபவிக்கமாட்டார்கள் என்று கூறினால் சரியல்ல. தாவா சொத்தில் வேலி அமைக்க எப்போது முற்பட்டேன் என்று கேட்டால் 24.10.2021 மற்றும் 15.11.2021 அன்று முற்பட்டேன்.

5. நானும் 1ம் பிரதிவாதியும் ஒரே கட்சியில் இருந்தோம் என்றும், 1ம் பிரதிவாதி வேறு கட்சிக்கு சென்று விட்டபடியால் அவர்மீது இருக்கும் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் ஏதும் கோரியுள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவில் டிரஸ்டி ஆவார் என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதி தான் அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவில் டிரஸ்டி என்று நிரூபிப்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு சொந்தமான சொத்துக்கள் தாவா சொத்தை தவிர வேறேதும் இலுப்பூர் கிராமத்தில் அமைந்துள்ளதா தாவா சொத்து அமைந்துள்ளதா என்றால் இல்லை. அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவில் இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

6. தாவா சொத்திற்கும் எனக்கு மற்றும் 2ம் பிரதிவாதிக்கும், எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றும் நாங்கள் இருவரும் சேர்ந்து 1ம் பிரதிவாதியை எதிர்த்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்து அதில் பொய் சாட்சியம் அ ளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சொத்தை அனுபவம் செய்வதற்கும் அதை மேற்பார்வை செய்வதற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா. ஆ. 1 ல் தாவா சொத்து என் மேற்பார்வையில் உள்ளது என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றும், என் அனுபவத்தில் உள்ளது என குறியீடு எதுவும் செய்யவில்லை சொன்னால் சரிதான். வா.சா. ஆ. 2 ல் தாவா சொத்து அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு சொந்தமானது தான் என்று குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா. ஆ- 3 ல் புல எண் எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான் அதில் பட்டா எண் மட்டும்தான் குறியீடு செய்வார்கள். வா.சா. ஆ. 3 ல் தியாகராஜர் கோவில் என்பதை அடித்து திருத்தி அதனை அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவில் என்று மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

7. ஆகையால் வா.சா. ஆ- 3 க்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா. ஆ. 4 ல் 19.12.2020 என்ற தேதி குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் வா.சா. ஆ. 5 ல் 19.12.2021 என்று தான் குறிப்பிட்டுள்ளது என் று சொன்னால் சரிதான், உதவி ஆய்வாளர் பயிற்சிக்கு சென்று விட்டார். வா.சா. ஆ. 6 மற்றும் வா.சா. ஆ- 7 ல் 2ம்பிரதிவாதியின் பெயரும், அருள்மிகு சிதம்பரம் நடராஜர் கோவில் பெயரும் தட்டச்சு மூலமாகவும் எழுத்து மூலமாகவும் எந்த இடத்திலும் குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா. ஆ. 6 மற்றும் வா.சா. ஆ. 7 ல் வரிசை எண்கள் எதுவும் குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா. ஆ. 4 , 6 மற்றும் 7 ல் உள்ள விபரங்களை நான் தான் எழுதினேன் என்று சொன்னால் சரிதான்.

8. பொதுவாக கோவிலில் நாம் செலுத்தும் பணத்தை ரசீது புக்கில் குறியீடு செய்து அந்த ரசீது தான் கொடுப்பார்கள் என்றும், லெட்டர் பேடில் எழுதி அதை கொடுக்க மாட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக லெட்டர் பேடை எங்கிருந்தோ பெற்று அதில் எழுதி ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா. ஆ- 6, 7 மற்றும் வா.சா.ஆ 8, 9 ல் குறிப்பிட்டுள்ள முகவரி மற்றும் 2ம் பிரதிவாதியின் கையெழுத்து வெவ்வேறாக உள்ளது என்று சொன்னால் சரிதான்.

9. வா.சா.ஆ. 13 வில்லங்க சான்றே கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் விபரங்கள் குறித்தும் எனக்கு எதுவும் தெரியாது என்றும், நான் அதில் அனுபவத்தில் இல்லை என்றும், அவ்வாறு அனுபவத்தில் இருந்திருந்தால் அதற்குரிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றும் ஆகையால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க ஆட்சேபனை எதுவுமின்றி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**